# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 59/ந/2017
நாள் : 18/03/2019

**திரு எம். சீனிவாசன்,**
**மயிலாடுதுறை – 609 001.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**மயிலாடுதுறை நகராட்சி,**
**மயிலாடுதுறை – 609 001.** – **எதிர் மனுதாரர்**

மயிலாடுதுறை நகராட்சி, எண்.20/45, விஜித்திராயர் தெரு முகவரியில் வசிக்கும் திரு எம். சீனிவாசன் அவர்களது 15.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2017 அன்று பெறப்பட்டு 59/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி அலுவலர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

மயிலாடுதுறை நகராட்சி, எண்.20/45, விஜித்திராயர் தெரு முகவரியில் வசிக்கும் திரு எம். சீனிவாசன் என்பவர் மயிலாடுதுறை அவையம்பாள்புரம், நகர நில அளவை எண்.1481, 2 D எண்ணிட்ட கட்டடத்தில் பிஸ்மி என்ற உணவகம் உணவு பாதுகாப்பு உரிமம், நகராட்சி வர்த்தக உரிமம், சுகாதார உரிமம், தீயணைப்பு தடையின்மை, வணிக வரி பதிவுச் சான்றிதழ் முதலியனவற்றை பெறாமல் சட்டத்திற்குப் புறம்பாக 2008–ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். இதுபோன்று உரிய உரிமம் பெறாமல் சென்னை ஆயிரம் விளக்குப் பகுதி, பீட்டர்ஸ் சாலையில் இயங்கி வந்த சரவணபவன் உணவகத்திற்கு முத்திரை வைத்த நாளிதழ் செய்தியினையும் குறிப்பிட்டுள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் 13.04.2017 நாளிட்ட கடிதத்தில் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள முகவரியில் திரு முகமது முஸ்தபா என்பவர் பிஸ்மி என்ற உணவகத்தை 2012–ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறார் என்றும் நகராட்சி மூலம் அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில் உரிம கேட்பு நிர்ணயிக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ளார். மேலும், நகராட்சி மூலம் உணவு பாதுகாப்பு உரிமம், தீயணைப்பு தடையின்மைச் சான்று முதலிய சான்றிதழ்கள் வழங்கப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான இனங்கள் அடங்கிய தலைப்புகளில் ஆய்வு செய்தல் மற்றும் வருடாந்திர கட்டணம் வசூல் தொடர்பான பணிகள் துப்புரவு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், உணவு பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் தற்போது மைய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்றும் 09.05.2017 அன்று நடைபெற்ற விசாரணையின்போது தெரிவித்தார். நகராட்சி ஆணையர்த் தொடர்ந்து நகராட்சி துப்புரவு ஆய்வாளரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. பிஸ்மி உணவகம் எந்த உரிமமும் பெறவில்லை என்றும் எனினும் ஒவ்வொரு ஆண்டும் அருவருக்கத் தக்க மற்றும் அபாயகரமான தலைப்பின் கீழ் ரூ. 450/– வசூலிக்கப்பட்டு வருகிறது என துப்புரவு ஆய்வாளர் விசாரணையின் போது தெரிவித்தார். இவ்வுணவகம் 2012 முதல் செயல்பட்டு வருவதையும் உறுதி செய்தார்.

3. முறையீட்டு மனுதாரரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி உணவகம் குறித்து முறையீட்டு மனுவில் தெரிவித்த விவரங்களையே விசாரணையின்போது குறிப்பிட்டார். தனது முறையீட்டு மனு மீது நகராட்சி எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையிலேயே இம்முறைமன்ற நடுவத்தை நாடியதாகக் குறிப்பிட்டார்.

4. மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால், 2006–ஆம் ஆண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டத்தின் கீழ் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அவ்வமைப்பினால் 2011–ஆம் ஆண்டு உணவு பாதுகாப்பு மற்றும் (உரிமம் மற்றும் உணவு வர்த்தகப் பதிவு) வழிகாட்டுதல்களை (Regulations) வெளியிட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் தரம் வழி காட்டுதல்கள் 2011–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 5 ம் நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளன. மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்களின் கீழ் உணவகம் ஒன்றை நடத்த உரிமம் பெறுவதற்கு அல்லது பதிவு செய்வதற்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர அமைப்பின் தலைமைச் செயல் அலுவலரால் (Chief Executive Officer) நியமனம் செய்யப்பட்ட அலுவலரிடம் (Designated Officer) முறையாக விண்ணப்பம் செய்து பதிவு உரிமத்தினைப் பெறவேண்டும். உரிமம் பெற்றது குறித்து நகராட்சி ஆணையர் கண்காணித்து உரிமம் பெறப்படாவிட்டால் உரிய துறைக்கு தெரிவிக்கவேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது. மேலும், 2012–ஆம் ஆண்டிலிருந்துதான் 'பிஸ்மி' உணவகம் செயல்பட்டு வருகிறதென்றும் அதற்கு முன் செயல்படவில்லையென நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். கட்டிட உரிமையாளரிடமிருந்து அனுமதியோ அல்லது வாடகை ஒப்பந்தமோ பெற்று உரிமம் நிர்ணயம் செய்யவேண்டுமென நகராட்சி சட்டத்தில் இல்லையென நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மயிலாடுதுறை நகராட்சி மூலம் தொழில் உரிமம் (D&O Trade Licence) இவ்வுணவகத்திற்கு உரிய படிவத்தில் வழங்கப்படாமல் உணவக உரிமையாளரால் செலுத்தப்பட்ட தொகை மட்டும் நகராட்சிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. தகுதியின் அடிப்படையில் தொழில் உரிமம் வழங்குவது அல்லது மறுப்பளித்து நகராட்சி ஆணையர் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி ஆணையாளருக்கு உத்தரவிடப்படுகிறது. இதர துறையினரிடமிருந்து உரிமங்கள் / சான்றுகள் வழங்குவது குறித்து இந்நடுவத்தால் ஆணை பிறப்பிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2019– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 18–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

19.3.19

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
மயிலாடுதுறை நகராட்சி,
மயிலாடுதுறை – 609 001.
நாகப்பட்டிணம் மாவட்டம்.

2. திரு எம்.சீனிவாசன்,
3/45 விஜித்திராயர்,
மயிலாடுதுறை – 609 001.
நாகப்பட்டிணம் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இகோ. / உதிரிகள்